

சாவ்பாவ்

பூன் லே தொகுதிக்கு நேற்று சமூக வருகை மேற்கொண்ட சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் (இடது) தோசை சுடுவதில் தமது திறனை வெளிப்படுத்துகிறார். நடுவில் நிற்பவர் பூன் லே தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஹோ கியோக் சூ.

# குழந்தைப் பராமரிப்பு மானியங்கள் அதிகரிப்பு

**வீ. பழனிச்சாமி**

குறைந்த வருமானக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான குழந்தைப் பராமரிப்பு மானியங்கள் வரும் ஜனவரி 1ம் தேதி முதல் அதிகரிக்கப்படும்.

அப்படிப்பட்ட குடும்பங்களில் உள்ள முதல் நான்கு குழந்தைகளுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியங்கள் ஜனவரி முதல் குடும்பங்களின் அனைத்து குழந்தை களுக்கும் நீட்டிக்கப்படுகின்றன.

சமூக வருகை மேற்கொண்டு பூன் லே தொகுதிக்கு நேற்று வந்த சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன், குடியிருப் பாளர்களுடன் நடந்த கலந்துரை யாடலின்போது இவ்விவரங் களைத் தெரிவித்தார்.

குடும்ப வருமானம் $1,800க்குக் குறைவாக இருத்தலும், குழந்தையின் தாயார் வேலை செய்யவேண்டும் என்பதும் மானியத்தைப் பெறுவதற்கான விதிமுறைகளில் அடங்கும்.

ஜனவரி 22ம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ள அடுத்த நிதி ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், தேவை அதிகம் உள்ளோருக்கு மேலும் உதவிகள் கிடைக்க வாய்ப்புண்டு என அமைச்சர் கோடி காட்டினார்.

உதவி தேவைப்படுவோர் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மேலும் செய்திகள் பக்கம் 3ல்

| | தற்போது | | 1.1.09 முதல் |
|---|---|---|---|
| மாதாந்திர குடும்ப வருமானம் | 1வது / 2வது பிள்ளைக்கான கூடியபட்ச மாதாந்திர சி.எஃப்.ஏ.சி. (CFAC) மானியம் | 3வது / 4வது பிள்ளைக்கான கூடியபட்ச மாதாந்திர சி.எஃப்.ஏ.சி. (CFAC) மானியம் | ஒவ்வொரு பிள்ளைக்கான கூடியபட்ச மாதாந்திர சி.எஃப்.ஏ.சி. (CFAC) மானியம் |
| $500க்குக் குறைவு | $340 வரை | $275 வரை | $340 வரை |
| $501 - $1,000 | $300 வரை | $200 வரை | $300 வரை |
| $1,001 - $1,500 | $250 வரை | $150 வரை | $250 வரை |
| $1,501 - $1,800 | $200 வரை | $100 வரை | $200 வரை |

# நிதிப் பற்றாக்குறையால் உதவிகள் நிற்கக்கூடாது

**வீ. பழனிச்சாமி**

நிதி போதவில்லை என்ற காரணத்தால் வசதி குறைந்தவர்களுக்குக் கொடுக்கப் பட்டு வரும் உதவிகளில் தேக்கம் ஏற்படக் கூடாது. அவை தொடர்ந்து செயல்பட கூடுதல் நிதி தேவை என்றால் அரசு அதைக் கொடுக்கும் என்று சமூக வளர்ச்சி, இளையர், விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பூன் லே தொகுதியைச் சுற்றிப் பார்த்த அமைச்சர், பின்னர் குடியிருப்பாளர் களிடம் இந்த நற்செய்தியைக் கூறினார்.

தொகுதிச் சுற்றுலாவின் இறுதியில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசிய அமைச்சர், "பொருளியல் நிலை எந்த அளவில் இருந்தாலும் சிங்கப்பூரிலுள்ள பிள்ளைகள் அனைவரும் நல்ல முறையில் பராமரிக்கப்படவேண்டும்.

"அவர்கள் சென்று கல்வி பயில பள்ளிக் கூடங்கள், ரொட்டி மட்டும் அல்லாத சூடான உணவு வகைகள், அவர்களைப் பராமரிப்பதற்கும், கற்றுக் கொடுப்ப தற்கும், நம்பிக்கை ஊட்டுவதற்கும், வெற்றி பெற முன்னுதாரணங்களாக இருப்ப தற்கும் பெரியவர்கள் இருக்க வேண்டும்," என்பதை வலியுறுத்தினார்.

வசதி குறைந்த குடும்பங்களுக்கு வாடகை வீடுகள் கிடைக்கச் செய்வதில் அரசாங்கம் அதிக நீக்குப்போக்கைக் கடைப்பிடிக்குமா என்று குடியிருப் பாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், "வாடகை வீடுகளுக்கான மக்கள் வரிசை நீண்டுகொண்டு போகிறது. முன்பு பெரிய வீடுகளில் இருந்த மூத்த குடிமக்கள் இப்போது வாடகை வீடுகளில் வசிக்க விரும்பு கின்றனர்.

"விவாகரத்து செய்துகொள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால், பிரிந்து செல்லும் தம்பதிகளுக்கு இரு வீடுகள் தேவைப்படுகின்றன. இப்படிப் பட்ட பிரச்சினைகளை வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் அணுக்கமாகக் கவனித்து செயல்பட்டு வருகிறது," என்றார்.

சிடிசி எனப்படும் சமூக மேம்பாட்டு மன்றங்களிடமிருந்து உதவிகள் தாமத மாகக் கிடைக்கின்றன என்று சொன்ன குடியிருப்பாளரிடம் பேசிய தென்மேற்கு மாவட்ட மேயர் டாக்டர் ஏமி கோர், "உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் உதவி பெறலாம். சிடிசி மூலம் உதவி தாமதமாக வருகிறது என்றால் உடனே நீங்கள் எனது அலுவலகத்துக்கு வரலாம் அல்லது எனது மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம்," என்றார்.

வேலையில் நீடிப்பதுதான் சிங்கப்பூரின் ஆக முக்கியமான சமூக பாதுகாப்பு வலை. ஆகவே, தொடர்ந்து வேலையில் நீடித்திருக்க மக்கள் தங்கள் ஆற்றலைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார் அமைச்சர் விவியன்.



தேசிய சராசரி அளவுடன் ஒப்புநோக்க பூன் லே தொகுதியில் அதற்கும் அதிகமாக மூத்த குடிமக்கள் வசிக்கின்றனர். அவர்களையும் சேர்த்து வசதி குறைந்தவர்களைப் பராமரிக்க பூன் லே தொகுதிக்கு 20% கூடுதல் நிதி வழங்கப்படும் என்று அமைச்சர் விவியன் அறிவித்தார். (படங்கள்: சாவ்பாவ்)



பூன் லே தொகுதியில் இளம் குடியிருப்பாளர் ஒருவருடன் அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன்.

## பூன் லேக்கு அதிக நிதி உதவி கிடைக்கும்

வசதி குறைந்தோருக்கு மட்டும் அல்லாமல் மூத்த குடிமக்களுக்கும் அதிக உதவிகள் வழங்கப்படும் என்றார் அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன்.

சிங்கப்பூரின் 84 தொகுதியில் உள்ள குடிமக்கள் ஆலோசனைக் குழு (சிசிசி) ஒவ்வொன்றும் ஓராண்டுக்குத் தலா $52,000 நிதி வழங்கப்படுகிறது. $6.25 மில்லியன் காம்கேர் நீக்குப்போக்கு நிதியிலிருந்து வழங்கப்படும் அந்தத் தொகை மூலம் சிசிசி பல்வேறு உதவித் திட்டங்களுக்குச் செலவழிக்கலாம்.

பூன் லே தொகுதியில் தேசிய சராசரி அளவைவிட அதிகமான மூத்த குடிமக்கள் வசிப்பதால், அவர்களுக் கான திட்டங்களுக்கு இந்த $52,000 நிதி போதவில்லை என்று அத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தம்மைக் கேட்டுக்கொண்டதால், அத்தொகுதிக்கு மேலும் குறைந்தது 20 விழுக்காடு கூடுதல் நிதி வழங்கப்படும் என்று அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தெரிவித்ததும், அரங்கில் இருந்தோர் பலத்த கரவொலி எழுப்பி தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.